# மக்கள் வங்கி

**நிதி துறையில் வெற்றிகரமான ஒரு தொழிலுக்கான உங்கள் பாதை**

தற்பொழுது மக்கள் வங்கி நிதித்துறையில் தன்னை சக்திவாய்ந்த துடிப்பு மிக்க அரச வர்த்தக வங்கியாக மீள நிலைநிறுத்தியுள்ளது. எங்களுடைய பக்கத்தில், உயர் செயலாற்றுகைக்காக அர்ப்பணிப்புடன், ஊக்கத்துடன் மற்றும் பொறுப்புடன் செயலாற்றுகின்ற ஆர்வமும் ஆற்றலும் மிக்க எதிர்கால இளம் தலைவர்களைத் தேடிக்கொண்டிருக்கின்றோம். இந்தத் திறமை உங்களிடம் இருந்தால் வாருங்கள் வந்து எம்முடன் இணைந்துகொள்ளுங்கள்.

# வாடிக்கையாளர் சேவை உதவியாளர்

**தகைமைகள் மற்றும் அளவுகோல்**

- இலங்கைப் பிரசையாக இருக்க வேண்டும்.
- க.பொ.த (சாதாரண தர) பரீட்சையில் ஒரே அமர்வில் கணிதம், ஆங்கிலம் மற்றும் சிங்கள மொழி/தமிழ் மொழி உட்பட 05 திறமைச் சித்திகளுடன் குறைந்தபட்சம் ஆறு (06) பாடங்களில் சித்தி பெற்றிருக்க வேண்டும்.

**அல்லது**

- Edexcel அல்லது Cambridge சாதாரண தர (O/L) பரீட்சையில் ஒரே அமர்வில் ஆங்கிலம் மற்றும் கணிதம் உட்பட 06 "C" சித்திகளுடன் குறைந்தபட்சம் 06 பாடங்களில் சித்தி பெற்றிருக்க வேண்டும்.

**மற்றும்**

- க.பொ.த. (உயர் தர) பரீட்சையில் ஒரே அமர்வில் (பொது ஆங்கில மொழியைத் தவிர்த்து) குறைந்தபட்சம் 03 சாதாரண சித்திகளைப் பெற்றிருக்க வேண்டும். எவ்வாறாயினும் பொது ஆங்கில மொழியில் சித்தி பெற்றிருப்பது மேலதிக தகைமையாக சேர்த்துக்கொள்ளப்படும்.

**அல்லது**

- Edexcel அல்லது Cambridge உயர் தர (A/L) பரீட்சையில் ஒரே அமர்வில் குறைந்தபட்சம் 03 "E" சித்திகள் பெற்றிருக்க வேண்டும்.

**வயது**

- விண்ணப்ப முடிவு திகதியன்று வயது 18 வயதுக்குக் குறையாமலும் 23 வயதுக்கு மேற்படாமலும் இருக்க வேண்டும். (27.07.2007 அன்று அல்லது அத்தேதிக்கு முன்னர் 27.07.2002 அன்று அல்லது அத்தேதிக்கு பின்னர் பிறந்த விண்ணப்பதாரர்கள் வயது தொடர்பான தகுதிகளை பூர்த்தி செய்தவர்கள் எனக் கருதப்படுவார்கள்)

**மொழித் தேர்ச்சி மற்றும் திறமைகள்**

- சிங்களம்/தமிழ் மற்றும் ஆங்கில மொழியில் நல்ல தொடர்பாடல் திறமை.
- சிங்களம்/தமிழ் மற்றும் ஆங்கில மொழியில் பணியாற்றும் அறிவு.
- கணினி கல்வி அறிவு.
- மிகச்சிறந்த சமூகத் தொடர்பாடல் திறன்.
- அழுத்தமான சூழ்நிலையின் கீழ் பணியாற்றும் திறமை மற்றும் உயர்மட்ட நேர்மைத் திறன்.
- இலக்கைச் சார்ந்துள்ள மற்றும் பன்மைத்துவ திறமைகள்.
- நீடிக்கப்பட்ட நேரங்களிலும் வார இறுதி நாட்களிலிலும் பணியாற்ற விரும்புதல்.

**தேர்ந்தெடுக்கும் முறை**

- இந்தத் திட்டத்தின் கீழ் ஆட்சேர்ப்பு செய்யப்படும் விண்ணப்பதாரர்கள். 2 வருடங்கள் பயிற்சி ஒப்பந்த அடிப்படையில், வங்கித் துறையின் அனைத்து அம்சங்களையும் உள்ளடக்கிய முறையான மற்றும் விரிவான பயிற்சிக்கு உட்படுத்தப்படுவர்.
- தேர்வுச் செயல்முறை இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தின் நேரடி மேற்பார்வையுடன் கூடிய நிகழ்நிலை தேர்வு (Onsite, Supervised, Online Examination) மூலம் நடத்தப்பட்டு தேர்வு செய்யப்பட்ட (shortlisted) விண்ணப்பதாரர்களுக்கு வங்கியால் நடத்தப்படும் நேர் முகத் தேர்வு/ தேர்வுகள் மூலம் மேற்கொள்ளப்படும்.
- ஒவ்வொரு மாவட்டத்திலும் நிலவும் வெற்றிடங்களை அடிப்படையாகக் கொண்டு திறமை அடிப்படையில் மாவட்ட ரீதியாகத் தெரிவு இடம்பெறும்.
- பல்கலைக்கழகத்தின் நேரடி மேற்பார்வையுடன் கூடிய நிகழ்நிலை தேர்வு 1 வினாத்தாளைக் கொண்டிருக்கும் தேர்வின் உள்ளடக்கம் பின்வருமாறு.

| பாடம் | வினாக்கள் வகை | வினாக்களின் எண்ணிக்கை | காலம் | மொத்த புள்ளிகள் |
|---|---|---|---|---|
| வங்கியியல் மற்றும் நிதி, தகவல் தொழில்நுட்ப அறிவு, பொது அறிவு, எண்ணியல் சார்ந்த திறன்கள், பொது உளச்சார்பு, திறன்களை பரீட்சித்தல், IQ (நுண்ணறிவு) | MCQ | 50 | 1 மணித்தியாலம் | 100 |

- இது முழு நேர தொழில் என்பதனால் ஏதேனும் பல்கலைக்கழகத்தில் பட்டப்படிப்பைத் தொடர்கின்றவர்கள் அல்லது படிக்கின்றவர்கள் மற்றும் பல்கலைக்கழகத்தில் அத்தகைய பாடநெறிகளைக் கற்பதற்கு அனுமதி பெற்றவர்கள் இந்தப் பதவிக்கு விண்ணப்பிக்கத் தகுதியற்றவர்களாவார்கள்.
- பரீட்சார்த்தி தேர்வில் சித்திபெற்றிருந்தாலும் விண்ணப்ப முடிவுத்திகதியில் வங்கி தீர்மானித்துள்ள குறைந்தபட்ச தகைமைகளை பூர்த்தி செய்திருக்கா விட்டாலும் அல்லது தவறான/பிழையான தகவல்களை சமர்ப்பித்திருந்தாலும் ஆட்சேர்ப்புச் செயல்முறையின் எந்தவொரு கட்டத்திலும் எந்தவித முன்னறிவிப்பும் இன்றி அவர் நிராகரிக்கப்படுவார். மேலும், மேற்குறிப்பிட்ட ஆட்சேர்ப்புத் தகுதிகளை உறுதிசெய்யும் ஆவணங்களை, சான்றிதழ்கள் சரிபார்க்கும் நேரத்தில் சமர்பிக்க தவறும் விண்ணப்பதாரர்களின் விண்ணப்பங்கள் உடனடியாக நிராகரிக்கப்படும்.
- பரீட்சை மும் மொழிகளில் (சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம்) நடைபெறும். பரீட்சார்த்தி தாம் விரும்பும் ஒரு மொழி மூலம் மாத்திரம் பரீட்சைக்குத் தோற்ற அனுமதிக்கப்படுவார்.
- வாடிக்கையாளர் சேவை உதவியாளர்கள் ஒப்பந்த காலத்தில் அமர்த்தப்படுகின்ற மாவட்டத்தில் தொடர்ச்சியாக சேவையாற்ற வேண்டும். அவர்களை நிரந்தர பணியாட் தொகுதியில் சேர்த்துக்கொள்ள வங்கி தீர்மானிக்கும் பட்சத்தில், குறித்த மாவட்டத்தில் திரட்டிய 10 வருடங்களுக்கு சேவையாற்றும்படி வேண்டப்படுவார்கள்.
- மேற் குறிப்பிட்ட தகுதி அளவுகோலைப் பூர்த்தி செய்யாத விண்ணப்பதாரிகள் இப் பதவிக்கு விண்ணப்பித்தலாகாது என அறிவுறுத்தப்படுவதோடு, மேற் குறிப்பிட்ட அளவுகோலைப் பூர்த்தி செய்யாத எவரேனும் பரீட்சார்த்தியை ஆட்சேர்ப்பின் எந்தக் கட்டத்திலும் தகுதியற்றவராக்குவதற்கு வங்கிக்கு உரிமை உண்டு.

**பயிற்சிகால கொடுப்பனவு**

- பயிற்சிக் காலத்தில் மாதாந்த பயிற்சி கொடுப்பனவு செலுத்தப்படும்.

**விண்ணப்பங்கள்**

குறித்த விண்ணப்பம் இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தின் **https://ou.ac.lk/peoplesbank-csa/** என்ற இணைப்பிலும் மற்றும் மக்கள் வங்கி இணையத்தளத்தின் "careers" என்ற Tab அமைப்பின் கீழும் வெளியிடப்பட்டுள்ளது. விண்ணப்பங்களை விண்ணப்ப முடிவு திகதிக்கு முன்னர் நிகழ் நிலையில் (Online) மாத்திரம் சமர்பிக்க முடியும். **விண்ணப்பங்களை சமர்பிக்கும் இறுதித் திகதி 27.07.2025 ஆகும்.** நிகழ் நிலை (Online) செயல் முறையை தவிர்த்து வேறு எந்த முறையினூடாகவும் சமர்ப்பிக்கப்படும் விண்ணப்பங்கள் எந்தவொரு சூழ்நிலையிலும் ஏற்றுக்கொள்ளபடமாட்டாது.

விண்ணப்பங்களைச் சமர்ப்பிப்பது சம்பந்தமான அறிவுறுத்தல்கள் இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தின் இணையத்தளத்தில் வெளியிடப்பட்டுள்ளது. குறிப்பிடப்பட்ட அறிவுறுத்தல்களைக் கவனமாக வாசித்து விண்ணப்பங்களை நிரப்புதல் விண்ணப்பதாரர்களின் பொறுப்பு ஆகும்.

அனைத்து விண்ணப்பங்களும் அந்தரங்கமாகக் கையாளப்படுவதோடு, எந்தவிதமான ஆதரவு தேடல் தகுதியின்மையாகக் கருதப்படும். அனைத்து பூரணமற்ற மற்றும் விதிகளை இணங்கியொழுகாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். தெரிவு செய்யப்பட்ட பரீட்சார்த்திகளை மாத்திரம் அழைக்கும் உரிமை வங்கிக்கு உண்டு.

பதவி வெற்றிடங்களின் எண்ணிக்கை, ஆட்சேர்ப்பை ஒத்திவைப்பதற்கு அல்லது இரத்துச் செய்வதற்கு அல்லது விளம்பரத்தில் சேர்க்கப்படாத ஏனைய தகவல்கள் என்பவற்றைத் தீர்மானிக்கும் உரிமை வங்கிக்கு உண்டு.

வங்கியில் ஸ்தாபிக்கப்பட்டுள்ள தகவல் பாதுகாப்பு கொள்கையைப் பூரணமாக இணங்கியொழுகி உங்களுடைய தனிப்பட்ட இரகசிய தரவுகளையும் அந்தரங்கத் தன்மையையும் பாதுகாப்பதை வங்கி உறுதிப்படுத்துகிறது.

**பிரதிப் பொதுமுகாமையாளர் (மனித வளங்கள்)**
**மக்கள் வங்கி - தலைமை அலுவலகம்**
**இல.75, சேர் சிற்றம்பலம் ஏ. காடினர் மாவத்த,**
**கொழும்பு - 02.**


www.peoplesbank.lk
1961 PEOPLE'S BANK CALL CENTRE
PEOPLE'S BANK
Pride of the Nation
AA-(lka) Fitch Rating, AAA Brand Finance Rating
People's Bank is a Licensed Commercial Bank supervised by the Central Bank of Sri Lanka